தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 172 | 4 Pages | 19.1.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 172 | 4 பக்கங்கள் | 19.1.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று**

**விளக்கம்:** பலச் சுடர்களை உடைய பெரு நெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்த போதிலும் கூடுமானால் அவன்மேல்சினங்கொள்ளாதிருத்தல்நல்லது.

# "மோடி அரசால் அரசியல் சட்டத்துக்கு ஆபத்து" துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜன.19

சென்னை கீழ்பாக்கம் ஜெயின்ட் ஜார்ஜ் மைதானத்தில் தி.மு.க. சட்டத்துறையின் 3வது ஒரு நாள் மாநில மாநாடு இன்று தொடங்கியது. சட்டத்துறையின் 3வது மாநில மாநாட்டை பொதுச்செயலாளர் துரைமுருகன் தொடங்கி வைத்தார்.

காலை 10 மணிக்கு ஒரு நாடு ஒரு தேர்தல் கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் மூத்த வக்கீல் கபில் சிபல் எம்.பி., முன்னாள் தலைமை தேர்தல் ஆணையாளர் எஸ்.ஒய்.குரேஷி, இந்து என்.ராம் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.



இந்நிலையில் தி.மு.க. சட்டத்துறையின் 3வது மாநில மாநாட்டில் பேசிய துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், "தி.மு.க. சட்டத்துறையின்3வது மாநில மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறேன். பல முக்கியமான வழக்குகளில் ஆணித்தரமான வாதங்களை முன் வைத்து, உரிமைகளை வென்றது திமுக சட்டத்துறை.

மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க. அரசால் அரசியல் சட்டத்துக்கு ஆபத்து வந்துள்ளது. மேலும், ஜனநாயகம், மதச்சார்பின்மை, சோஷலிசம் போன்றவற்றை தகர்க்கும் முயற்சியில் மோடி அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்தியா கூட்டணி அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்தை உயர்த்திப் பிடிக்கிறது. கூட்டாட்சி தத்துவம், மதச்சார்பின்மையை சீர்குலைக்கும் வகையில் மத்திய பா.ஜ.க. அரசு செயல்பட்டு வருகிறது.

பொது சிவில் சட்டம், ஒரே நாடு, ஒரே தேர்தல், வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவை கடுமையாக எதிர்த்து போராடி வருகிறோம். மத்திய பா.ஜ.க. அரசின் புதிய குற்றவியல் சட்டங்களை தி.மு.க. சட்டத்துறை தொடர்ந்து எதிர்த்து வருகிறது" என்று அவர் கூறினார்.

## 'அனுபவி ராஜா அனுபவி' ஓராண்டுக்கு பிறகு தி.மு.க.வை மக்கள் எங்கே வைப்பார்கள் என்று தெரியாது செல்லூர் ராஜூ

மதுரை, ஜன.19

மதுரையில் எம்.ஜி.ஆர். பிறந்தநாளையொட்டி கே.கே.நகர் ரவுண்டானா பகுதியில் உள்ள அவரது சிலைக்கு முன்னாள்அமைச்சர் செல்லூர் ராஜூ தலைமையில் அ.தி.மு.க. வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் செல்லூர் ராஜூ நிருபர்களிடம் கூறியதாவது:

அனுபவி ராஜா அனுபவி, இருக்கும்போதே அனுபவி என ஆட்சியில் இருக்கும் போதே அனைத்தையும் அனுபவிப்பதில் கலைஞர் குடும்பம் சிறந்த குடும்பம். மக்கள் வறுமையிலும், வறட்சியிலும் இருந்தபோது தள்ளாத வயதில் மானாட மயிலாட பார்த்தவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஊர் ஊராக சென்று சைக்கிள் ஓட்டி விளம்பரம் செய்கிறார். அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவிற்கு தனது மகனோடு வந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஒரு பெண் அதிகாரியான மாவட்ட கலெக்டரை இருக்கையில் இருந்து எழ வைத்திருக்கிறார். இந்த ஆட்சியில் அதிகாரிகள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு இதுவே சாட்சி.



உலகத் தமிழ் மாநாடு தி.மு.க. நடத்திய போது உலகத்திலிருந்து வந்த அறிஞர்கள் எல்லாம் கீழே அமர வைக்கப்பட்டார்கள். கலைஞர் குடும்பம் மட்டும் மேடையில் அமர வைக்கப்பட்டார்கள். அனுபவிக்கிறார்கள், அனுபவிக்கட்டும். இன்னும் ஒரு வருடம் தான். அதற்கடுத்து மக்கள் இவர்களை எங்கே வைப்பார்கள் என்று தெரியாது. ஓ.பன்னீர்செல்வத்தை நாங்கள் அனைவரும் மறந்து விட்டோம்.

எம்.ஜி.ஆரை யாரும் வென்றது கிடையாது. கடவுளை யாரும் கண்டது கிடையாது. 2026சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்று மீண்டும் எடப்பாடியார் முதலமைச்சராக வருவார். இவ்வாறு அவர் கூறினார்.

## ஸ்பெடெக்ஸ் திட்டம் வெற்றி இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு ஜி.கே.வாசன் பாராட்டு

சென்னை, ஜன.19

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட் ஸ்பேடெக்ஸ்பி, ஸ்பேடெக்ஸ்ஏ ஆகிய 2 செயற்கைக் கோள்களை சுமந்தபடி விண்ணில் பாய்ந்தது. ராக்கெட்டின் இரு பாகங்கள் வெவ்வேறு சுற்றுப்பாதைகளில் திட்டமிட்ட இலக்கில் நிலை நிலை நிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் ஸ்பேடெக்ஸ் ஏ, ஸ்பேடெக்ஸ் பி செயற்கைகோள்களை ஒருங்கிணைக்கும் பணியை இஸ்ரோ மேற்கொண்டது. தீவிர ஆய்வுக்கு பிறகு இரண்டையும் இணைக்கும் பணி வெற்றி பெற்றது.

ரஷியா, அமெரிக்கா, சீனாவை தொடர்ந்து இதனை மேற்கொள்ளும் 4வது நாடு என்கிற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

ஸ்பேடெக்ஸ் திட்ட வெற்றியால் உலக அளவில் இந்திய விஞ்ஞானிகளுக்கும், இந்திய நாட்டிற்கும் புகழ் சேர்கிறது. விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியாவிற்கு இது ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்திருக்கிறது.



ஸ்பேடெக்ஸ் திட்டத்தை வெற்றி பெறச் செய்ய பாடுபட்ட இஸ்ரோ விஞ்ஞானிகளை த.மா.கா. சார்பில் பாராட்டி, வாழ்த்துகிறேன். தமிழ்நாட்டின் நாராயணன் இஸ்ரோ தலைவராக பொறுப்பேற்ற பிறகு இது முதல் வெற்றி என்பது தமிழர்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்திருக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தீபாவளி சீட்டு பணம் விவகாரம்: கணவருடன் தகராறு; கர்ப்பிணி தற்கொலை



கிருஷ்ணகிரி, ஜன.19

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே சாப்பரானப்பள்ளி கிராமத்தில் வசிப்பவர் கார்த்திக்குமார் (30 வயது), கூலி தொழிலாளியான இவருக்கு திருமணம் ஆகி இரண்டரை ஆண்டுகள் ஆகிறது. மனைவி உஷா (23 வயது). இந்த தம்பதிக்கு ஒன்றரை வயதில் ஜெய்வந்த் என்ற ஆண் குழந்தை உள்ளது. தற்போது உஷா 4 மாதம் கர்ப்பிணியாக இருந்தார்.

கார்த்திக்குமார் தீபாவளி சீட்டு நடத்தி வந்துள்ளார். தீபாவளி சீட்டு நஷ்டம் அடைந்ததாக தெரிகிறது. கடந்த தீபாவளிக்கு சீட்டு கட்டியவர்களுக்கு பொருட்கள் வழங்கவில்லை எனவும் கூறப்படுகிறது. இதனால் தீபாவளி சீட்டு கட்டியவர்கள் கார்த்திக்குமாரிடம் பணம் கேட்டு வந்துள்ளனர். இதுதொடர்பாக கணவன் மனைவி இடையே அடிக்கடி தகராறு எற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தீபாவளி சீட்டு பணம் கேட்டு சிலர் கார்த்திக்குமார் வீட்டுக்கு வந்துள்ளனர். இதனால் நேற்று முன்தினம் இரவு கணவன், மனைவி இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் மனம் உடைந்த உஷா வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டதாக தெரிகிறது. தகவல் அறிந்த தேன்கனிக்கோட்டை போலீசார் உஷாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உஷாவுக்கு திருமணம் ஆகி இரண்டரை ஆண்டுகள் மட்டுமே ஆவதால் இந்த சம்பவம் குறித்து ஒசூர் உதவி கலெக்டர் விசாரணை நடத்தி வருகிறார்.



புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் தைத்திருநாள் பொங்கல் விழாவினை முன்னிட்டு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களையும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் கழகத் துணைச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களையும் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களையும் நேரில் சந்தித்து புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்து வாழ்த்து பெற்றார் கடந்த 25 ஆண்டு காலமாக மக்கள் சேவையை மகேசன் சேவையாக பணியாற்றி வரும் கோவை வடக்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர்.காரமடை நகராட்சி 24 வது வார்டு கவுன்சிலர் திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ராமமூர்த்தி அவர்கள் வாழ்த்து பெற்றார்

## கேரளாவை உலுக்கிய கொலை வழக்கு: தண்டனை விவரத்தை அறிவிக்கிறது கோர்ட்டு



திருவனந்தபுரம், ஜன.19

கேரள மாநிலம் பாறசாலையை சேர்ந்தவர் ஷாரோன் ராஜ் (வயது25). இவர் குமரி மாவட்டம் நெய்யூரில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் படித்து வந்தார். இவர் களியக்காவிளையை அடுத்த ராமவர்மன்சிறையை சேர்ந்த கிரீஷ்மா (22) என்ற கல்லூரி மாணவியை காதலித்து வந்தார். இருவரும்தீவிரமாககாதலித்து வந்தநிலையில்திற்பரப்பு, திருவனந்தபுரம் உள்பட பல்வேறு இடங்களுக்கு ஜாலியாக சுற்றி வந்தனர்.

இந்தநிலையில் கடந்த 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ந் தேதி ஷாரோன் ராஜ்க்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் 11 நாட்களுக்குப் பின்னர் அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்தநிலையில் தங்களுடைய மகனை அவரது காதலி கிரீஷ்மா தான் விஷம் கொடுத்து கொலை செய்தார் என்று ஷாரோன் ராஜின் பெற்றோர் பாறசாலை போலீசில் புகார் செய்தனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அத்துடன் இந்த வழக்கு திருவனந்தபுரம் குற்றப்பிரிவுக்கு மாற்றப்பட்டது.

குற்றப்பிரிவு போலீசார் நடத்திய விசாரணையில் ஷாரோன் ராஜை காதலி கிரீஷ்மா தனது வீட்டுக்கு வரவழைத்து கசாயத்தில் விஷம் கலந்து கொடுத்து கொலை செய்தது தெரியவந்தது. மேலும் இந்த கொலைக்கு கிரீஷ்மாவின் தாய் சிந்து மற்றும் தாய்மாமா நிர்மல் குமார் ஆகியோர் உடந்தையாக இருந்துள்ளனர்.

இதையடுத்து அவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு நெய்யாற்றின்கரை கூடுதல் அமர்வு கோர்ட்டில் நடைபெற்று வந்தது. தற்போது இந்த வழக்கில் இறுதிக்கட்ட விசாரணை முடிந்தது. இதையடுத்து இந்த வழக்கில் நேற்று (ஜன. 17ந் தேதி) தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கிய நெய்யாற்றின்கரை கூடுதல் அமர்வு கோர்ட்டு ஷாரோன் கொலை வழக்கில் கிரீஷ்மா மற்றும் விஷம் வாங்கிகொடுத்த அவரது தாய்மாமா நிர்மல் குமார் அகியோர் குற்றவாளிகள் என அறிவித்தது.

இரண்டாம் குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்த கிரீஷ்மாவின் தாய் சிந்துவை வழக்கில் இருந்து விடுவித்து கோர்ட்டு உத்தரவிட்டது.

இந்நிலையில் குற்றவாளிகளுக்கான தண்டனை விவரங்கள் அறிவிக்கப்படும் என்று கோர்ட்டு தெரிவித்துள்ளது.

## நடிகர் சயிப் அலிகானை கத்தியால் குத்தியவரின் புதிய புகைப்படத்தை வெளியிட்ட போலீசார்



மும்பை, ஜன.19

பாலிவுட்நடிகர்சயிப்அலிகான். கடந்தபுதன்கிழமை இரவு அவரது வீட்டிற்கு வந்த மர்மநபர் ஒருவர் சயிப் அலிகானை கத்தியால் குத்திவிட்டு தப்பினார். ரத்த வெள்ளத்தில் கிடந்த சயிப் அலிகானை குடும்பத்தினர் மீட்டு ஆட்டோ மூலம் அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

சயிப் அலிகானின் உடலில் 6 இடங்களில் ஏற்பட்ட கத்தி குத்து காயங்களுக்கு தீவிர சிகிச்சை அளித்தனர். தற்போது அவர் அபாய கட்டத்தை தாண்டி நலமுடன் உள்ளார். இந்த விவகாரத்தில் தச்சு தொழிலாளி ஒருவரை பிடித்து நேற்று போலீசார் விசாரித்தனர். ஆனால் இந்த சம்பவத்தில் அவருக்கு தொடர்பு இல்லை என்று தெரியவந்தது. இதனையடுத்து அவர் விடுவிக்கப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர். குற்றவாளியை பிடிக்க போலீசார் இதற்காக 30 தனிப்படைகள் அமைத்துள்ளனர்.

இந்நிலையில், நடிகர் சயிப் அலிகானை கத்தியால் குத்தியவரின் புதிய புகைப்படத்தை போலீசார் வெளியிட்டுள்ளனர். பாந்த்ரா ரெயில் நிலையத்தில் உள்ள சிசிடிவியில் கொள்ளையனின் காட்சிகள் பதிவாகி இருந்திருக்கிறது. அதனை தற்போது போலீசார் வெளியிட்டுள்ளனர்.

## திருமணத்துக்கு மறுத்த இளம்பெண்ணுக்கு கத்திக்குத்து: காதலன் வெறிச்செயல்



பெங்களூரு, ஜன.19

கர்நாடக மாநிலம் ஜே.ஜே.நகர் போலீஸ் எல்லைக்குட்பட்ட பகுதியை சேர்ந்தவர் அஜய் (வயது 27). இவரும் அதே பகுதியை சேர்ந்த இளம்பெண் ஒருவரும் காதலித்து வந்தனர். இவர்களின் காதலுக்கு பச்சை கொடி காட்டிய பெற்றோர், அவர்களுக்கு திருமணம் செய்துவைக்க முடிவு செய்தனர்.

இந்தநிலையில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு இளம்பெண், அஜயை திருமணம் செய்ய மறுத்ததாக தெரிகிறது. இதனால் அவர்கள் 2 பேருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதனால் கோபமடைந்த அஜய், இளம்பெண்ணை கொலை செய்ய அஜய் திட்டமிட்டார். அதன்படி, தனியாக பேச வேண்டும் என்று இளம்பெண்ணை அஜய் அழைத்து சென்றுள்ளார்.

அந்த சமயத்தில் அஜய், தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் இளம்பெண்ணின் வயிற்றில் குத்திவிட்டு தப்பி ஓடிவிட்டார். இதில் அவர் பலத்த காயம் அடைந்து உயிருக்கு போராடினார். அக்கம்பக்கத்தினர் விரைந்து வந்து இளம்பெண்ணை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து ஜே.ஜே.நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து அஜயை கைது செய்தனர். மேலும் அவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பொங்கல் விளையாட்டு போட்டியில் உற்சாகமாக பங்கேற்ற வெளிநாட்டு சுற்றுலா பயணிகள்

காஞ்சிபுரம், ஜன.19

காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகம், தமிழக சுற்றுலாத் துறை சார்பில் காஞ்சிபுரம் அடுத்த தேவரியம்பாக்கம் கிராமத்தில் பொங்கல் விழா மற்றும் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதனை பார்க்க கனடா, ஜெர்மனி நாட்டை சேர்ந்த வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் தேவரியம்பாக்கம் கிராமத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களுக்கு பாரம்பரிய முறைப்படி மலர்மாலை அணிவித்து, நெற்றியில் திலகமிட்டு, மேளதாளம் முழங்க, உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



விழாவை முன்னிட்டு கிராம தேவதையான அம்மனுக்கு பொங்கல் வைக்கப்பட்டது. பின்னர் அங்குள்ள கோவில் வளாகத்தில் பொங்கல் விழா விளையட்டு போட்டிகள் விமரிசையாக நடந்தது. நிகழ்ச்சிக்கு தேவரியம் பாக்கம் ஊராட்சித் தலைவர் அஜய்குமார் தலைமை தாங்கினார். மாமல்லபுரம் சுற்றுலா அலுவலர் எஸ்.சக்திவேல் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மண் பானை செய்தல், வழுக்கு மரம் ஏறுதல், உறியடித்தல், இளவட்டக்கல் தூக்குதல், சாக்குப்பை ஓட்டப் பந்தயம், இசை நாற்காலி கோலப் போட்டி (வீதி முழுதும்), ஜோசியம் மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளான பரதநாட்டியம், சிலம் பாட்டம், வில்லுப்பாட்டு பட்டி மன்றம் உள்ளிட்டவை நடைபெற்றன.

கிராம மக்களுடன் இணைந்து வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் உறி அடித்தல், மண் பானை செய்தல் உள்ளிட்ட போட்டிகளில் உற்சாகமாக கலந்து கொண்டனர். வெளி நாட்டினர் மாட்டு வண்டியில் ஊர்வலமாக சென்று கிராமத்தை பார்வையிட்டு மகிழ்ந்தனர். பொங்கல் விளையாட்டு விழாவில் கிராமத்தை சேர்ந்த திரளானோர் பங்கேற்றனர்.

# 6,442 பாம்புகளை ஆறு மாதத்தில் பிடித்த இருளர்கள் விஷம் எடுக்கும் பணி தீவிரம்

மாமல்லபுரம், ஜன.19

மாமல்லபுரம் அடுத்த, வடநெம்மேலி கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள முதலை பண்ணை வளாகத்தில், இருளர் பாம்பு பிடிப்போர் தொழில் கூட்டுறவு சங்கம் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் இந்த சங்கத்தில் செங்கல்பட்டு, சென்னை திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களை சேர்ந்த 350க்கும் மேற்பட்ட இருளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.




இவர்கள், நல்ல பாம்பு, கண்ணாடி விரியன், கட்டு விரியன், சுருட்டை விரியன் உள்ளிட்ட கொடிய விஷமுடைய பாம்புகளை பிடித்து சங்கத்தில் ஒப்படைப்பது வழக்கம்.

இந்த பாம்புகளை மண் பானையில் அடைத்து வைத்து, பாதுகாத்து அதில் இருந்து விஷம் எடுக்கப்படுகிறது. வடநெம்மேலியில் உள்ள பாம்பு பண்ணையை சுற்றுலா பயணிகள் பார்க்கவும் அனுமதிக்கப்படுகின்றனர். பொங்கல் தொடர் விடுமுறையில் இங்கு அதிகளவில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

இந்த ஆண்டு 13 ஆயிரம் பாம்புகள் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. இதையடுத்து கடந்த 6 மாதங்களில் 1130 கட்டு விரியன், 5043 சுருட்டை விரியன், கண்ணாடி விரியன் 149, நல்ல பாம்பு 120 என மொத்தம் 6 ஆயிரத்து 442 பாம்புகள் பிடிக்கப்பட்டு உள்ளது.

இந்த பாம்புகளிடம் விஷம் எடுக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. தற்போது குளிர் காலம் என்பதால் குளிரை தாக்கு பிடிக்க பாம்புகள் உள்ள பானைகளை சுற்றி வைக்கோல் வைத்து பாம்புகளுக்கு சூடு ஏற்படுத்தும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

# முல்லைப்பெரியாறு அணையின் புதிய கண்காணிப்புக்குழுவுக்கு தமிழக விவசாயிகள் எதிர்ப்பு: 25ந்தேதி போராட்டம் நடத்த முடிவு

கூடலூர், ஜன.19

முல்லைப்பெரியாறு அணை புதிய கண்காணிப்புக்குழுவில் கேரள பொறியாளர்கள் 2 பேர் சேர்க்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிற 25ந் தேதி போராட்டம் நடத்த பெரியாறு, வைகை பாசன விவசாயிகள் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.



உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட பழைய கண்காணிப்புக்குழு கலைக்கப்பட்டு புதிய கண்காணிப்புக்குழு தலைவராக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் அனீஸ் ஜெயின் நியமிக்கப்பட்டார். இந்த ஆணையமே முல்லைப்பெரியாறு அணை தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கவனிக்கும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் புதிய கண்காணிப்புக்குழுவில் இடம்பெற்றுள்ள கேரள நீர் பாசனத்துறை பொறியாளர்களை நீக்க வேண்டும் என பெரியாறு, வைகை பாசன விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறு நீக்காவிட்டால் வருகிற 25ந்தேதி போராட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அன்வர் பாலசிங்கம் கூறியதாவது:

மத்திய அரசு முல்லைப் பெரியாறு அணையை கண்காணிக்க புதிய தலைவராக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் அனீஸ் ஜெயின், தமிழக அரசு சார்பில் நீர்வளத்துறை கூடுதல் தலைமை செயலர் மணிவாசகன், காவிரி தொழில்நுட்பக்குழு தலைவர் சுப்பிரமணியன் ஆகியோரும் கேரள நீர் பாசனத்துறையைச் சேர்ந்த 2 பொறியாளர்கள் இந்திய அறிவியல் கழகம் சார்பில் ஒருவர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அணையில் தண்ணீர் தேங்கும் பகுதி 999 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட பகுதியாகும். மேலும் ஏக்கருக்கு ரூ.30 வீதம் வரி, மின்சார உற்பத்தி செய்தால் தமிழக அரசு சார்பில் வரி செலுத்தப்படுகிறது. இந்த நிலையில் எதன் அடிப்படையில் புதிய கண்காணிப்புக்குழுவில் கேரள பொறியாளர் இடம் பெற முடியும்? இதனை தமிழக விவசாயிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். தமிழக அரசுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட இடத்தில் வரும் காலங்களில் எந்த ஒரு சிறிய வேலை செய்ய வேண்டும் என்றாலும் கேரள அதிகாரிகளின் உத்தரவுக்காக காத்திருக்க வேண்டும். எனவே குழுவின் தலைவர் அனீஸ் ஜெயின், தமிழக நீர்வளத்துறை பொறியாளர்கள் மட்டும் அடங்கிய குழுவை அமைக்க வேண்டும். இல்லையென்றால் வருகிற 25ந் தேதி விவசாயிகளை திரட்டி மாபெரும் போராட்டம் நடத்துவோம் என்றார்.

# எருது விடும் நிகழ்ச்சியில் மாடு முட்டியதில் வாலிபர் உயிரிழப்பு

காரிமங்கலம், ஜன.19

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது.

விழாவின் முக்கிய நிகழ்வாக எருது விடும் விழா பல்வேறு கிராமங்களில் நடந்தது.

இதில் காரிமங்கலம் அடுத்த ராமாபுரம் மண்டு பகுதியில் மாலை 3 மணி அளவில் எருது விடும் நிகழ்ச்சி நடந்தது. இதில் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட எருதுகளை பொது மக்கள் இளைஞர்கள் அலங்கரித்து இழுத்துச் சென்றனர்.

இதில் மாடுகள் அங்குமிங்குமாக இழுத்துச் சென்றபோது மாடு ஆக்ரோசமாக ஓடியதில் கெரகோடஅள்ளியை சேர்ந்த சுதர்சன் (வயது25), ராமாபுரத்தைச் சேர்ந்த சந்திரசேகர் (30) ஆகியோர் மாடு முட்டியதில் வயிற்றில் பலத்த காயமடைந்து மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேபோல் மாடுகளை இழுத்து வந்தோர் மற்றும் வேடிக்கை பார்த்தோர் என 5 பேர் காயமடைந்தனர்.



இதைத்தொடர்ந்து மாடு முட்டி காயமடைந்த சுதர்சன் மற்றும் சந்திரசேகர் ஆகிய 2 பேரையும் பொதுமக்கள் மீட்டு சிகிச்சைக்காக காரிமங்கலம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இதில் சுதர்சனின் உடல் நிலை மோசமானதால், மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சுதர்சன் பரிதாபமாக உயிரிழந்தார். அப்போது அவரது உடலை பார்த்து உறவினர்கள் கதறி அழுதனர்.

இதுகுறித்து காரிமங்கலம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேபோன்று கும்பார அள்ளி ஊராட்சியில் நடந்த எருது விடும் நிகழ்ச்சியில் இருதரப்பிற்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பில் முடிவடைந்தது. ஊர் பெரியவர்கள் இருதரப்பினரையும் சமாதானம் செய்த நிலையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டு எருது விடும் நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது.

காரிமங்கலம் ராமசாமி கோவிலில் இன்று மாலை எருது விடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

# பள்ளத்தில் நிற்போரைப் படிகளில் ஏற்றிய "திராவிட மாடல்" அரசு: அமைச்சர் மதிவேந்தன்

சென்னை, ஜன.19

தமிழக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திராவிட இயக்கமும் தமிழ்நாட்டின் சமூக நீதி வரலாறும் பிரிக்க முடியாத உறவை கொண்டவை. நீதிக்கட்சி அரசு வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணையை வெளியிட்டு, இந்திய சட்டமன்ற வரலாற்றில் முதன்முதலில் இடஒதுக்கீடு முறையை அறிமுகப்படுத்தியது.

1928ஆம் ஆண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் நிரந்தரமாக்கப்பட்டது. இதனால், அரசியல், கல்வி, வேலைவாய்ப்பு உரிமை அனைத்துத்தரப்பு மக்களுக்கும் கிடைத்தது. அந்த நீதிக் கட்சியின் நீட்சி தான் திமுக அரசு. தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களை கல்வி, பொருளாதார, சமூக, அரசியல் தளத்தில் வலிமையுள்ளவர்களாகவும், வளர்ச்சி அடைந்தவர்களாகவும் உயர்த்த வேண்டும் என்பதுதான் திராவிட இயக்கத்தின் முதன்மை இலட்சியமாகும்.

இந்த இலட்சியப் பயணத்திற்கு பாதை அமைத்துதரும் இடஒதுக்கீட்டு உரிமைகள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த காலமெல்லாம் உணர்வுப்பூர்வமாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது வரலாறு. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களின் சமூகநீதி உரிமைகளை நிலைநாட்டும் வகையில் திமுக அரசு பல்வேறு வகையான இடஒதுக்கீட்டு சட்டங்களை இயற்றி வரலாறு படைத்துள்ளது.

சமூகத்தின் கடைநிலையில் இருப்பவர்களுக்கும் இடஒதுக்கீட்டின் பயன்கள் கிடைக்க வேண்டும் எனும் சமத்துவ நோக்கோடு பட்டியலின மக்களிடையே மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த அருந்ததியர் சமூக மக்களுக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை 2009ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்தபோது வழங்கினார் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்.



அதுவரையிலும் பட்டியலின மக்களுக்கான ஒதுக்கீட்டில் முழுமையாக பலனை அடையாத சமூகமாக அருந்ததியர் சமூகம் இருந்து வந்தது. இதனை அப்பொழுது ஓய்வுபெற்ற நீதியரசர் ஜனார்த்தனம் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியும் உறுதிப்படுத்தியிருந்தது.

முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கிய உள் ஒதுக்கீட்டின் பயனால் அதுவரை கல்வி, வேலைவாய்ப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் பெறாத அருந்ததியர் சமூக மக்கள், இன்றைக்கு உரிய பிரதிநிதித்துவத்தைப் பெற்று வருகிறார்கள் என்பதை சமீபத்தில் வெளியான தரவுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இதுகுறித்து இன்றைய தி இந்து ஆங்கில நாளிதழில் விரிவான செய்திக்கட்டுரை வெளியாகியுள்ளது.

மருத்துவக் கல்வியில் அருந்ததியர்களின் பிரதிநிதித்துவம் குறித்து வெளிவந்துள்ள தரவுகளின்படி 201819ஆம் ஆண்டில் எம்.பி.பி.எஸ் மருத்துவப் படிப்பு சேர்க்கையில் 3,600 இடங்களில் 107 இடங்கள் அருந்ததியர் மாணவர்களுக்கு கிடைத்திருந்தன. திராவிட மாடல் ஆட்சியில் 20232024ஆம் ஆண்டு எம்.பி.பி.எஸ் மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் 6,553 ஆக உயர்த்தப்பட்டு, அதன் மூலம் 193 அருந்ததிய சமூக மாணவர்கள் மருத்துவ கல்லூரிக்கு சென்றிருக்கிறார்கள்.

பல் மருத்துவ படிப்பை பொறுத்தவரை 20182019 ஆண்டில் மொத்தமுள்ள 1,080 இடங்களில் அருந்ததியர்சமூக மாணவர்களின் பிரதிநிதித்துவம் வெறும் 16 இடங்களே! அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 3 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை கூட முழுமையாக பூர்த்தி செய்ய இயலாமல், 1.5 விழுக்காடு அருந்ததியர் சமூக மாணவர்கள் மட்டுமே பல் மருத்துவம் பயின்றார்கள். இந்த அவநிலை 202324ஆம் ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில் மாற்றமடைந்தது. 1,737 பல் மருத்துவ படிப்பிற்கான இடங்களில் அருந்ததியர் பிரிவு மாணவர்கள் 54 பேர் இடம்பெற்றுள்ளனர். அவர்களுக்கான 3 விழுக்காடு பிரதிநிதித்துவம் முழுமையாக கிடைத்தது.

பொறியியல் படிப்புகளைப் பொறுத்தவரை 200910 ஆம் ஆண்டில் 1,193 இடங்களை பெற்றிருந்த அருந்ததியர் நிலை, 202324 ஆம் ஆண்டில் 3,944 இடங்களை பெற்று உயர்ந்துள்ளது.

ஒட்டு மொத்த பட்டியலின மக்களுக்கான இடஒதுக்கீட்டில், உள் ஒதுக்கீட்டின் பயனால் அருந்ததியர் பிரிவு மாணவர்கள் பொறியியல் படிப்புகளில் 201617 ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் வெறும் 8.7 விழுக்காடு அளவில் தான் பயன் பெற்று வந்த நிலையில், 202324 ஆம் ஆண்டில் 16 விழுக்காடு பயனைப் பெற்றுள்ளனர். இதர பட்டியலின சமூக மக்கள் 84 விழுக்காடு பயனடைந்து வருகின்றனர்.

அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை கலைஞர் அவர்கள்நிறைவேற்றிய போது, "அருந்ததியர் உள் ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை" என அன்றைக்கு சொன்னவர் ஜெயலலிதா. உள் ஒதுக்கீடு வழங்கிவிட்டு அமைதியாக இருக்காமல், அதற்கான தடைகளை தகர்த்து சட்டப் போராட்டங்களை உச்ச நீதிமன்றம் வரையில் போராடியது திமுக. அருந்ததியர் உள் ஒதுக்கீடு தொடர்பான தமிழக அரசின் சட்டம் செல்லும் என்று உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட அரசியல்சாசன அமர்வு கடந்த ஆண்டு உத்தரவிட்டது

2008 நவம்பர் 23ஆம் தேதி கலைஞர் அவர்கள் எழுதிய கவிதையில்,

கழிவுற்ற மலத்தைக் கைகளில் அள்ளி –

கண் கலங்க ஒரு தொழிலாளி;

தலையில் சுமந்து தன் நிலையை நினைத்து

நடக்கும் காட்சி இன்னமும் நடக்குதே நாட்டில்!

தலையில், கையில் மலம் தூக்குவோர் தலைவிதி மாற்றிட

தலையில் தூக்கி சனார்த்தனம் அறிக்கையை வைத்துக்கொண்டு ஆடுகின்றேன் நான்

பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைக்க; பணி புரிவோம் தொடர்ந்து!

பகுத்தறிவைத் துணை கொண்டு நடந்து!

எனக் குறிப்பிட்டார். அந்த பகுத்தறிவைத் துணைக் கொண்டு ஆட்சி நடத்தும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அரசு, எடுத்த முன்னெடுப்புகளால்தான் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்ச நீதிமன்றத்தில் பெற்றதோடு, அருந்ததியர் சமூகத்தினர் மருத்துவம் மற்றும்பொறியியல்படிப்பில் உரிய பிரதிநிதித்துவத்தையும் பெற்றிருக்கிறார்கள். பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைத்திருக்கிறோம் என்ற பெருமிதத்தோடு செயல்படுகிறது திராவிட மாடல் அரசு. சமூக நீதிக்கான இலட்சியப் பயணத்தில் இச்சாதனை ஒரு முக்கிய மைல்கல். இவ்வாறு அமைச்சர் மதிவேந்தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சேலம் ரெயில் நிலைய நடைபாதையில் குழந்தை பெற்ற பெண்



சேலம், ஜன.19

வேலூர் மாவட்டத்தை சேர்ந்த சூர்யாலைலா தம்பதியினர் கேரளாவில் தங்கி கூலிவேலை பார்த்து வருகின்றனர். இந்த நிலையில் லைலா நிறைமாத கர்ப்பிணியாக இருந்ததன் காரணமாக பிரசவத்திற்காக சொந்த ஊருக்கு இரவு கணவருடன் கேரளாவில் இருந்து ரெயில் மூலம் புறப்பட்டு வேலூருக்கு வந்து கொண்டிருந்தார். ரெயில் சேலம் ஜங்ஷன் ரெயில் நிலையம் வந்த போது லைலாவுக்கு திடீரென பிரசவ வலி ஏற்பட்டது. இதனால் உடனடியாக லைலா ரெயிலில் இருந்து பாதுகாப்பாக கீழே இறக்கப்பட்டார்.

பின்னர் 108 ஆம்புலன்சுக்கு தகவல் அளிக்கப்பட்டது. சேலம் அரசு மருத்துவமனையில் இருந்து 108 ஆம்புலன்ஸ் விரைந்து ரெயில் நிலையத்திற்கு வந்தது. ஆனால் அதற்குள் சேலம் ஜங்ஷன் ரெயில் நிலையம் 5வது நடைபாதையிலேயே லைலாவிற்கு பெண் குழந்தை பிறந்தது. இதற்கிடையே விரைந்து வந்த 108 ஆம்புலன்ஸ் ஊழியர் கண்ணன் மற்றும் டிரைவர் வடிவேல் ஆகியோர் தாய் லைலாவுக்கும், குழந்தைக்கும் முதலுதவி அளித்து சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

# பாம்பன் அருகே 4 மீனவ கிராமங்களில் கடல் உள்வாங்கியதால் மக்கள் அச்சம்

ராமநாதபுரம், ஜன.19

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன், ராமேசுவரம், தங்கச்சிமடம், மண்டபம் உள்ளிட்ட வடக்கு கடல் பகுதிகளும் கடந்த சில நாட்களாகவே வழக்கத்திற்கு மாறாக சீற்றத்துடன் காணப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்ல அச்சம் தெரிவித்து வந்தனர். அதேபோல் தாங்கள் பிடித்து வரும் மீன்களுக்கு போதிய விலை கிடைக்காமலும் அவதிப்பட்டனர்.



இந்தநிலையில் ராமேசுவரத்தை அடுத்த பாம்பன் தெற்கு மன்னார் வளைகுடா கடற்கரை பகுதியில் உள்ள தோப்புக்காடு, சின்னப்பாலம், முந்தல்முனை, தரவை தோப்பு உள்ளிட்ட 4 மீனவ கிராமங்களில் வழக்கத்திற்கு மாறாக சுமார் 500 மீட்டருக்கு மேல் கடல் உள்வாங்கியது. இதனால் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 30க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் தரைதட்டி நிற்கிறது.

அந்த படகுகளை மீட்க முடியாமல் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. எனவே சுமார் 100க்கும் மேற்பட்ட மீனவர்கள் வேலை இழந்துள்ளனர். மேலும் கடல் உள்வாங்கி இருப்பதால் அப்பகுதியில் கடற்கரை ஓரம் வசிக்கக்கூடிய நண்டு, சங்கு, சிற்பி, நட்சத்திர மீன் உள்ளிட்டவைகள் வெளியே தெரிந்து வருகிறது. அதனை நாய்கள், காகங்கள் இரையாக சாப்பிட்டன.

பாம்பன் தெற்கு கடற்கரை பகுதிகளில் அடிக்கடி கடல் உள்வாங்கி வருவதால் மீன்பிடி தொழிலை நம்பியுள்ள பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல முடியாமல் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளனர். எனவே குந்துகால்குருசடை தீவு இடையே உள்ள கடல் பகுதியை ஆழப்படுத்தினால் கடலில் நீரோட்டம் காரணமாக கடல் நீர் உள்வாங்காமல் இருக்கும் என மீனவர்கள் கூறினர். கடந்த இரண்டு நாட்களாக ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம், பாம்பன், மண்டபம், தங்கச்சிமடம் உள்ளிட்ட வடக்கு கடல் பகுதி கடுமையான சீற்றத்துடன் காணப்பட்டு வரும் நிலையில் பாம்பன் தெற்கு மன்னார் வளைகுடா கடல் வழக்கத்திற்கு மாறாக 500 மீட்டருக்கு மேல் கடல் உள்வாங்கியுள்ளதால் மீனவர்கள் குழப்பம் அடைந்துள்ளனர்.

# கந்துவட்டி கொடுமையால் பட்டதாரி வாலிபர் தற்கொலை முயற்சி 2 பேர் கைது

நெல்லை, ஜன.19

நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவி அருகே களக்காடு ரோட்டில் உள்ள பூதத்தான்குடியிருப்பை சேர்ந்தவர் சிவ பெருமாள் (24). பி.டெக். படித்துள்ளார். இவர் ஆன்லைனில் பணத்தை செலுத்தி வர்த்தகம் செய்து வந்துள்ளார். ஆன்லைன் வர்த்தகம் செய்யவும், புதிதாக தொழில் தொடங்கவும் ஆன்லைன் செயலி மூலம் 3 தவணையாக ரூ.5 லட்சம் கடனாக வாங்கி உள்ளார். ஆனால் அந்த செயலியில் 10 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை கந்து வட்டி வசூல் செய்ததாக கூறப்படுகிறது.

இதனால்சிவபெருமாள் வாங்கிய பணத்தையும், அதற்கானவட்டித்தொகையையும் செலுத்த முடியாமல் திணறி வந்துள்ளார். அவரிடம் ஆன்லைனில் வட்டிக்குபணம்கொடுத்த களக்காடு சிதம்பராபுரத்தை சேர்ந்த முத்துக்கிருஷ்ணன் மகன் சக்தி குமரன் (28) என்பவரும், திருக்குறுங்குடி அருகே உள்ள மாவடி ராமச்சந்திராபுரத்தை சேர்ந்த வெங்கடேஷ் (22) என்பவரும் பணத்தை திரும்பக்கேட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் சிவபெருமாளை நேரில் அழைத்து பணத்தை குறிப்பிட்ட தேதியில் செலுத்தக்கோரி ஒப்பந்த பத்திரத்தில் கையெழுத்து போடுமாறும், அல்லது அவரது மோட்டார் சைக்கிளை தங்களிடம் ஒப்படைத்து விடுமாறும் நெருக்கடி கொடுத்து வந்துள்ளனர். இதனால் சிவ பெருமாள் 2 பேரிடமும் மோட்டார் சைக்கிளை ஒப்படைத்து விட்டு வீட்டிற்குச் சென்றுள்ளார்.

விரக்தியில் இருந்த சிவ பெருமாள் கடந்த 2 நாட்களுக்கு முன்பு விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றார். இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அவரது உறவினர்கள் சிவ பெருமாளை மீட்டு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். இச்சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த சேரன்மகாதேவி போலீசார் கந்து வட்டி கேட்டதாகவும், தற்கொலைக்கு தூண்டியதாகவும் சக்திகுமரன், வெங்கடேஷ் ஆகிய 2 பேர் மீதும் வழக்குப்பதிவு செய்து போலீசார் அவர்களை கைது செய்தனர்.

இளைஞர்கள்பலர் ஆன்லைன் டிரேடிங் அல்லது ஆன்லைன் விளையாட்டு உள்ளிட்டவற்றில் பணத்தை வைத்து விரைவில் அதிக பணத்தை சம்பாதிக்க முடியும் என நினைத்து பல லட்சங்களை கடனாக பெற்று அதைசெலுத்தமுடியாமல் திணறுவதை பார்க்க முடிகிறது. எவ்வளவு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தினாலும் இது போன்று பலரும் சிக்கிக் கொள்வதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

# தொழிலாளி வெட்டிக்கொலை சமரச பேச்சுவார்த்தை நடத்திய போலீசார் முன்னிலையிலேயே நடந்த கொடூரம்

கூடலூர், ஜன.19

முல்லைப்பெரியாறு அணை புதிய கண்காணிப்புக்குழுவில் கேரள பொறியாளர்கள் 2 பேர் சேர்க்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிற 25ந் தேதி போராட்டம் நடத்த பெரியாறு, வைகை பாசன விவசாயிகள் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.




உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட பழைய கண்காணிப்புக்குழு கலைக்கப்பட்டு புதிய கண்காணிப்புக்குழு தலைவராக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் அனீஸ் ஜெயின் நியமிக்கப்பட்டார். இந்த ஆணையமே முல்லைப்பெரியாறு அணை தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கவனிக்கும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் புதிய கண்காணிப்புக்குழுவில் இடம்பெற்றுள்ள கேரள நீர் பாசனத்துறை பொறியாளர்களை நீக்க வேண்டும் என பெரியாறு, வைகை பாசன விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறு நீக்காவிட்டால் வருகிற 25ந்தேதி போராட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அன்வர் பாலசிங்கம் கூறியதாவது:

மத்திய அரசு முல்லைப் பெரியாறு அணையை கண்காணிக்க புதிய தலைவராக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் அனீஸ் ஜெயின், தமிழக அரசு சார்பில் நீர்வளத்துறை கூடுதல் தலைமை செயலர் மணிவாசகன், காவிரி தொழில்நுட்பக்குழு தலைவர் சுப்பிரமணியன் ஆகியோரும் கேரள நீர் பாசனத்துறையைச் சேர்ந்த 2 பொறியாளர்கள் இந்திய அறிவியல் கழகம் சார்பில் ஒருவர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அணையில் தண்ணீர் தேங்கும் பகுதி 999 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட பகுதியாகும். மேலும் ஏக்கருக்கு ரூ.30 வீதம் வரி, மின்சார உற்பத்தி செய்தால் தமிழக அரசு சார்பில் வரி செலுத்தப்படுகிறது. இந்த நிலையில் எதன் அடிப்படையில் புதிய கண்காணிப்புக்குழுவில் கேரள பொறியாளர் இடம் பெற முடியும்? இதனை தமிழக விவசாயிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். தமிழக அரசுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட இடத்தில் வரும் காலங்களில் எந்த ஒரு சிறிய வேலை செய்ய வேண்டும் என்றாலும் கேரள அதிகாரிகளின் உத்தரவுக்காக காத்திருக்க வேண்டும். எனவே குழுவின் தலைவர் அனீஸ் ஜெயின், தமிழக நீர்வளத்துறை பொறியாளர்கள் மட்டும் அடங்கிய குழுவை அமைக்க வேண்டும். இல்லையென்றால் வருகிற 25ந் தேதி விவசாயிகளை திரட்டி மாபெரும் போராட்டம் நடத்துவோம் என்றார்.

# இளவட்டக்கல் தூக்கும் போட்டியில் அசத்திய இளைஞர்கள், பெண்கள்

பெரம்பலூர், ஜன.19

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தடை வட்டம், கைகளத்தூர் கிராமத்தில் பொங்கல் தின விழாவை முன்னிட்டு 2 சமூகத்தினருடைய பிரச்சனை ஏற்பட்டது. இதனை தொடர்ந்து காவல்துறையினர் தலைமையில் சூமுக பேச்சுவார்த்தை நடைபெற்றது.



இந்த பேச்சுவார்த்தை நடைபெற்ற கொண்டிருக்கும் பொழுதே ஒரு தரப்பை சேர்ந்த தேவேந்திரன் மற்றொரு தரப்பை சேர்ந்த தொழிலாளி மணி என்பவரை சரமாரியாக அரிவாளால் வெட்டினார். இதில் மணி சம்பவ இடத்திலேயே பலியானார்.

இதனால் அங்கு பரபரப்பும், பதட்டமும் உண்டானது. அங்கு கூடி இருந்தவர்கள் நாலாபுறமும்சிதறி ஓடினர். மேலும் அங்கு மோதல் அதிகரிக்கும் சூழல் உண்டானது. இதையடுத்து அங்கு கூடுதல் போலீசார் குவிக்கபப்ட்டனர்.

இதனை தொடர்ந்து கைகளத்தூர் போலீசார் விரைந்து சென்று மணியை கொலை செய்த தேவேந்திரனை மடக்கி பிடித்தனர்.

பின்பு அவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் கொலை செய்யப்பட்ட மணியின் உறவினர்கள் கைகளத்தூர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது. இதன் காரணமாக ஏராளமான போலீசார் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர்.

# பர்கூர் தாமரைக்கரை மலைப்பகுதியில் சாலையில் உலா வரும் காட்டுயானை

அந்தியூர், ஜன.19

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அடுத்த பர்கூர் மலைப்பகுதி உள்ளது. இந்த மலைப்பகுதியில் யானை, மான், கரடி, செந்நாய் உள்ளிட்ட வனவிலங்குகள் உள்ளன. இவற்றில் அவ்வப்போது வனப்பகுதியை விட்டு யானை சாலையை கடந்து வேறு பகுதிக்கு செல்வதும் உண்டு.



இந்த சமயங்களில் சாலையில் சிறிது நேரம் நின்று சாலையோரம் உள்ள மூங்கில் தூரிகளை உடைத்து சுவைத்து விட்டு செல்லும். கடந்த 4 நாட்களாக மேற்கு மலை தாமரைக்கரை பகுதி சாலையில் ஒற்றை காட்டுயானை ஒன்று சாலையிலேயே நடந்து சென்றும், அந்த பகுதியில் உள்ள மூங்கில் தூர்களைசுவைத்தும், சாலையில் யாரும் செல்ல முடியாத அளவுக்கு அச்சத்தை ஏற்படுத்தி பகல் நேரத்தில் சாலையில் உலாவருவதாகவும் அந்த பகுதிக்கு இருசக்கர வாகனத்தில் சென்று வரும் அந்தியூர் பகுதியை சேர்ந்தவர்கள் கூறுகின்றார்.

மேலும் இந்த ஒற்றை யானையால் சாலையின் இருபுறங்களிலும் வாகனங்கள் நின்றும், வனப்பகுதிக்குள் யானை சென்ற பிறகு சாலையில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் அந்த பகுதிக்கு செல்லும் வாகன ஓட்டிகள், மலை வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது குறித்து வனத்துறையினர் வன விலங்குகள் அவ்வப்போது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குஇடம்பெயர்வதும், சாலையை கடப்பதும் வழக்கம்.

எனவே வாகனத்தில் செல்பவர்கள் வனப்பகுதிகளுக்குள் மிகுந்த எச்சரிக்கையோடு பாதுகாப்போடும் செல்ல வேண்டும். மேலும் அங்கே சாலையைக் கடக்கும் விலங்குகளை படம் பிடிப்பது, அதன் அருகில்செல்வதுமிகுந்த ஆபத்தை ஏற்படுத்தும். எனவே மிகுந்த எச்சரிக்கையோடு செல்ல வேண்டும் என்று வனத்துறையினர் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றனர்.

# சாலாமேடு பகுதியில் தொடர் கொள்ளையால் பொதுமக்கள் பீதி

விழுப்புரம். ஜன.19

விழுப்புரம் சாலாமேடு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் வசித்து வருபவர் அருண் லியோ கிங் (வயது 47).

இவர் திருவெண்ணைநல்லூர் அருகே உள்ள காரப்பட்டு கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராக பணி புரிந்து வருகிறார்.



அருண் லியோ கிங் மனைவி ஜான் ஜாக்குலின். இவர் திருவெண்ணைநல்லூர் அருகே உள்ள கிராமம் என்றஊரில்உள்ளதொடக்கப்பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார்.

அருண் லியோ கிங் சகோதரருக்கு பெங்களூருவில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

அவரை பார்ப்பதற்காக அருண் லியோ கிங் தனது மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் கடந்த திங்கட்கிழமை பெங்களூருவிற்கு சென்றார்.

நேற்று மாலை அவர்கள் வீடு திரும்பினார்கள். அப்போது வீட்டின் முன்பக்க கிரீல் கதவு உடைக்கப்பட்டு இருந்தது.

உள்ளே சென்று பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டு இருந்தது. அதில் வைக்கப்பட்டு இருந்த 17 அரை பவுன் நகைகள் கொள்ளை போய் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதன் மதிப்பு ரூ.10 லட்சம் இருக்கும் என கூறப்படுகிறது.

இது குறித்து அருண் லியோ கிங் விழுப்புரம் தாலுகா போலீசில் புகார் செய்தார். தகவலின் பேரில் விழுப்புரம் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு ரவீந்திர நாத் குப்தா, தாலுகா இன்ஸ்பெக்டர் செல்வநாயகம், சப்இன்ஸ்பெக்டர் ராஜ மன்னார் மற்றும் போலீசார் அங்கு விரைந்து வந்தனர்.

போலீஸ் மோப்ப நாயும் வரவழைக்கப்பட்டு. அது கொள்ளை நடைபெற்ற வீட்டைமோப்பம்பிடித்து 3 தெருக்கள் வழியாக சென்று போக்குவரத்து கழக தலைமை அலுவலகம் முன் நின்றது.

தடயவியல் நிபுணர்களும் கொள்ளை நடைபெற்ற வீட்டில் இருந்த தடயங்களை சேகரித்து சென்றனர்.

விழுப்புரம் சாலா மேடு பகுதியில் கடந்த 4 மாதங்களில் 7 கொள்ளை சம்பவம் நடை பெற்று உள்ளது. இதனால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர். எனவே புதியதாக பொறுப் பெற்றுள்ள போலீஸ் சூப்பிரண்டு சரவணன் தொடர் கொள்ளையை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி கிடையாது ஜெயக்குமார்

சென்னை, ஜன.19

சென்னை அ.தி.மு.க. தலைமை கழகத்தில் எம்.ஜி.ஆரின் 108வது பிறந்த நாள் கொண்டாடிய போது, முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:



எல்லா தரப்பட்ட மக்களும் உண்மையாக போற்றக்கூடிய தலைவராக எம்.ஜி.ஆர். இருக்கிறார். இது போல கருணாநிதிக்கு செய்கிறார்களா? கிடையாது. என்னதிரைபோட்டு மு.க.ஸ்டாலின் மூடினாலும் அ.தி.மு.க.வை அழிக்கவோமறைக்கவோ முடியாது.

ஈரோடு இடைத்தேர்தல் புறக்கணிப்பு என்பது அ.தி.மு.க.வின் முடிவு. போலியான வெற்றியை பெற தி.மு.க. எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்வார்கள்.

குருமூர்த்தி அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி சேர வேண்டும் என்றும் எடப்பாடிக்கு அரசியல் நோக்கு இல்லை என்றும் குற்றம் சாட்டுகிறார்.

குருமூர்த்தி ஏற்கனவே என்கிட்ட பல தடவை வாங்கிக் கட்டிக் கொண்டார். குருமூர்த்தி வாயை அடக்கிவைத்துக் கொள்ள வேண்டும். பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்பது கட்சியால் எடுக்கப்பட்ட முடிவு.

சட்டமன்றத் தேர்தலிலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்பதை, தெளிவாக கூறுகிறோம். இது கட்சி எடுத்த முடிவுதான்.

அ.தி.மு.க. ஆட்சியின் போது பொங்கல் பரிசு 2 ஆயிரத்து 500 ரூபாய் கொடுத்தபோது 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கலாமே என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அப்போது கூறினார். தற்போது பொங்கல் பரிசாக ரூ.5 ஆயிரம் கொடுக்க வேண்டாம், 2 ஆயிரத்து 500 ரூபாய் கொடுத்து இருக்கலாம். 2 ஆயிரத்து 500 ரூபாய் கொடுக்க முடியவில்லை என்றால் 1000 ரூபாய் கொடுத்து இருக்கலாம். ஆனால் அதுவும் கொடுக்காமல் பட்டை நாமம் போட்டுள்ளனர். இதனால் பொதுமக்கள் தி.மு.க. ஆட்சியின் மீது கோபத்தில் உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மரியாளையா சில்ட்ரன் ஹோம்: பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம்

சென்னை, ஜன.19

பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, சென்னை N3 அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி லட்சுமி அவர்களின் தலைமையில், மரியாளையா சில்ட்ரன் ஹோம் அமைப்பில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை பற்றிய விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இந்த நிகழ்வில், பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பு குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன.







# பண மாலையுடன் வந்த சுயேட்சை வேட்பாளருக்கு அனுமதி மறுப்பு

ஈரோடு, ஜன.19

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ந் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாள் என்பதால் ஏராளமான சுயேட்சை வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்ய வந்திருந்தனர்.



அப்போது அகில இந்திய ஊழல் தடுப்பு கூட்டமைப்பின் தேசிய தலைவராக இருக்கும் அபி ஆழ்வார் ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய வந்திருந்தார்.

அப்போது அவரது கழுத்தில் 50, 100, 200, 500 ரூபாய் நோட்டுகளை மாலையாக அணிந்து வந்தார். ஈரோடு மாநகராட்சி அலுவலகநுழைவுவாயில் அருகே வந்த போது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் அவரை தடுத்து கழுத்தில் பணம் மாலையுடன் உள்ளே செல்ல அனுமதி இல்லை என்றனர். இதனால் அந்த நபர் ஆத்திரமடைந்து போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

அப்போது அபி ஆழ்வார் கூறும்போது, இந்தியா முழுவதும் ஊழலுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு இருக்கிறேன். அதிகாரிகள் லஞ்சம் வாங்க கூடாது. பொதுமக்களும் லஞ்சம் கொடுத்து காரியங்களை சாதிக்கக்கூடாது. இதன் தொடர்ச்சியாக பல்வேறு தேர்தலில் போட்டியிட்டு வருகிறேன்.


தற்போது 52வது முறையாக ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதற்காக வேட்புமனு தாக்கல் செய்ய வந்திருக்கிறேன். ஆனால் போலீசார் என்னை அனுமதிக்கவில்லை என்றார்.

பின்னர் சிறிது நேரத்தில் அவர் கழுத்தில் அணிந்திருந்த பண மாலையை கழற்றி கையில் வைத்துக் கொண்டார். அதன் பின்னர் அவர் வேட்புமனு தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டார். இதனால் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கில் கைதானவர்கள் ஜாமின் கேட்டு மனு சி.பி.சி.ஐ.டி. பதில் அளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜன.19

கள்ளக்குறிச்சியில், கடந்த ஆண்டு ஜூன் மாதம் கள்ளச்சாராயம் குடித்து 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சின்னதுரை மற்றும் ஷாகுல் ஹமீது ஆகிய இருவரும் ஜாமின் கோரி சென்னை ஐகோர்ட்டில் மனுதாக்கல் செய்து இருந்தனர்.



இந்த மனு, நீதிபதி ஜி. ஆர்.சுவாமிநாதன் முன் விசாரணைக்கு வந்தபோது, குண்டர் சட்டத்தில் இருவரையும் சிறையில் அடைத்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டு உள்ளதாகவும், கைது காரணமாக அவர்களின்குடும்பபெயர் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும், விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க தயாராக இருப்பதாகவும் மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

இதைக் கேட்ட நீதிபதி, மனுவுக்கு வருகிற 23ந்தேதிக்குள் பதில் அளிக்கும்படி சி.பி.சி.ஐ.டி. போலீசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்தார்.

# உள்துறை செயலாளருக்கு கடிதம் எழுதிய இன்ஸ்பெக்டர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் டி.ஐ.ஜி. நடவடிக்கை

ராமநாதபுரம், ஜன.19

ராமநாதபுரம் ஆர்.எஸ். மங்கலம் போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வருபவர் சரவணன். இவர் கடந்த 16 ஆண்டுகளாக காவல்துறையில் பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் இன்ஸ்பெக்டர் சரவணன், தமது அதிகாரத்தை முழுமையாக போலீஸ் நிலையத்தில் செயல்படுத்த முடியவில்லை எனவும், திருவாடானை துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலக எழுத்தர் ஜடா முனி பல்வேறு விஷயங்களில் தலையிடுவதாக கூறி உள்துறை செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினார்.

அதில் இந்த போலீஸ் நிலையத்தில் பணி செய்ய இயலவில்லை என கூறி அந்த கடிதத்தை சமூக வலைதளங்களிலும் பதிவிட்டு இருந்தார். இதுகுறித்து அவர் கூறுகையில், திருவாடானை டி.எஸ்.பி. அலுவலகத்தில் இருந்து தொடர்ந்து தன்னிடம் கேட்காமல் ஆர்.எஸ்.மங்கலம் போலீஸ் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கு தன்னிச்சையாக அலுவல் பணிகள் ஒதுக்கப்படுகிறது.



மேலும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளுக்குதன்னை கேட்காமலேயே போலீசாரை நியமித்து வருகிறார்கள். தற்போது காவல் நிலைய சரகத்தில் சட்டம், ஒழுங்கு மற்றும் பொது அமைதியை நிலை நாட்ட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து வருகின்றனர். ஆயுதப்படையிலிருந்து தன்னிச்சையாக எனது கவனத்திற்கு தெரிவிக்காமல் நேரடியாக போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

உத்திரகோசமங்கை ஆருத்ரா தரிசன விழாவிற்கு என்னுடைய ஆர்.எஸ்.மங்கலம் போலீஸ் நிலையத்தில் இருந்து 14 போலீசாரை என்னிடம் தெரிவிக்காமல் பணியமர்த்தி உள்ளனர் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை முன் வைத்து, என்னை கேட்காமல் காவல் நிலையத்திலிருந்து போலீசாரை திடீர், திடீரென சட்டம்ஒழுங்கு பிரச்சனைக்கு அனுப்புவதால் போலீஸ் நிலையத்தில் பணிகள் முடங்கி கிடக்கிறது என்று தெரிவித்தார்.

இதுதொடர்பான விசாரணை நடத்தப்பட்ட நிலையில் உள்துறை செயலாளருக்கு கடிதம் அனுப்பிய இன்ஸ்பெக்டர் சரவணனை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி ராமநாதபுரம் சரக டி.ஐ.ஜி. அபிநவ்குமார் உத்தரவிட்டுள்ளார். இந்த நடவடிக்கை போலீஸ் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கூத்தாடி என்ற கூற்றைச் சுக்கு நூறாக உடைத்தவர் எம்.ஜி.ஆர். த.வெ.க. தலைவர் விஜய்

சென்னை, ஜன.19

மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இன் 108வது பிறந்த நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. எம்.ஜி.ஆர். பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை கிண்டியில் உள்ள எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள எம்.ஜி.ஆர். திருவுருவ சிலைக்கு அரசு சார்பில் அமைச்சர்கள் சேகர்பாபு, ரகுபதி, நாசர், அன்பரசன், மேயர் பிரியா உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

மேலும், தமிழகம் முழுக்க அ.தி.மு.க. கட்சியினர் மற்றும் பொதுமக்கள் எம்.ஜி.ஆர்.க்கு புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில், முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளுக்கு த.வெ.க. தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில்,



"அளவற்ற வறுமையைத் தாண்டினார். கூத்தாடி என்ற கூற்றைச் சுக்குநூறாக உடைத்து, தமிழக அரசியல் வரலாற்றின் மையம் ஆனார். அசைக்க முடியாத வெற்றியாளர் ஆனார். அவரே தமிழக அரசியலின் அதிசயம்ஆனார். இறந்தும் வாழும், புரட்சித் தலைவருக்குப் பிறந்தநாள் வணக்கம்.," என்று குறிப்பிட்டுள்ளார்.

# சென்னையில் சிறுமியின் ஆபாச புகைப்படங்கள் செல்போன் மூலம் விற்பனை தாய், தந்தை உள்பட 4 பேர் கைது

சென்னை, ஜன.19

சென்னை மயிலாப்பூர் அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்துக்கு கடந்த வாரம் அதிர்ச்சியூட்டும் புகார் ஒன்று வந்தது. புகார் கொடுத்தவர், 2 செல்போன்களை போலீசாரிடம் கொடுத்து, அந்த செல்போனில் 'வாட்ஸ் அப்' மூலம் குறிப்பிட்ட ஒரு சிறுமியின் ஆபாச புகைப்படங்கள், ஏராளமாக இருப்பதாகவும், அந்த ஆபாச புகைப்படங்கள் ஏராளமானோருக்கு 'வாட்ஸ் அப்' மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டது.

செல்போன் படங்களை ஆய்வு செய்த போலீசார் கடும் அதிர்ச்சி அடைந்தனர். குறிப்பிட்ட சிறுமி ஒருவரை, உல்லாசத்தில் ஈடுபடுத்தும் காட்சிகள், அதில் இடம் பெற்றிருந்தது. சிறுமியிடம் உல்லாசத்தில் ஈடுபடும் 2 பேரை மயிலாப்பூர்அனைத்து மகளிர் போலீசார், தீவிர விசாரணைக்குபின் அடையாளம் கண்டனர்.

சிறுமியிடம் உல்லாசத்தில் ஈடுபட்ட 2 பேரும் அதிரடியாக கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர், சென்னை பட்டினப்பாக்கத்தை சேர்ந்தவர். இன்னொருவர், தாம்பரத்தில் வசித்து வந்தார். அவர்கள் இருவர் மீதும், போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் நடவடிக்கை எடுத்தனர். சிறுமியை உல்லாசத்தில் ஈடுபடுத்தியதற்கு, அவரின் பெற்றோர்களே உடந்தையாக இருந்துள்ளனர்.

கைதான இருவரும், இந்த அதிர்ச்சி தகவல்களை வெளியிட்டனர். போக்சோ சட்டத்தில் சிறுமியின் தாய், தந்தையும் கைதானார்கள். மேலும், சிறுமியின் ஆபாச புகைப்படங்கள் 'வாட்ஸ் அப்' மூலம் விலைக்கு விற்கப்பட்டு உள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. பெற்றோர் சம்மதத்துடன் அரங்கேற்றப்பட்டுள்ள இந்த பாலியல் பட வியாபாரம், சென்னை போலீஸ் வட்டாரத்தில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. படத்தை விலைக்கு வாங்கி பார்த்த, மேலும் சிலரையும் போலீசார் தேடி வருகிறார்கள்.

பாதிக்கப்பட்ட சிறுமி, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவருக்கு ஆஸ்பத்திரியில் ரகசியமாக சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. போலீசாரின் பாதுகாப்பில் அவர் பத்திரமாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக அரசு சமீபத்தில் கொண்டுவந்துள்ள சட்டத்தின் மூலம் இந்த வழக்கில் கைதாகி உள்ளவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் தெரிவித்தனர். இந்த வழக்கு தொடர்பான விவரங்களை, போலீசார் மிகவும் ரகசியமாக வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊட்டி அருகே கோத்தர் பழங்குடியின மக்களின் கம்பட்ராயர் திருவிழா கொண்டாட்டம்

குன்னூர், ஜன.19

நீலகிரி மாவட்டத்தில் கோத்தர், தோடர், இருளர், பனியர், காட்டு நாயக்கர், குரும்பர் உள்ளிட்ட பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர்.

நீலகிரியின் மண்ணின் மைந்தர்களான பழங்குடியின மக்கள் தங்களது பாரம்பரியம் கலாச்சாரங்கள் மற்றும் சம்பிரதாயங்களை தற்போதும் கடைபிடித்து வருகிறார்கள்.

இயற்கையின் படைப்பில் விவசாயம் மற்றும் எருதுகள் மேய்ப்பது உள்ளிட்டவை இவர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையாகும். தற்போது சமகாலத்தில் கல்வி, பொருளாதாரம் என மேம்பட்டாலும், தங்களது பாரம்பரியத்தை கைவிடாது வாழ்ந்து பண்டிகைகளை கொண்டாடி வருகிறார்கள்.

குன்னூர், கோத்தகிரி, ஊட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கோத்தர் இன மக்கள் அய்யனோர், அம்மனோர் தெய்வங்களை தங்கள் குல தெய்வமாக வழிபட்டு வருகிறார்கள். அவர்கள் அய்யனோர், அம்மனோர் பண்டிகையை தங்களது பாரம்பரிய பண்டிகையாக கொண்டுகின்றனர். இதனை கம்பட்ராயர் திருவிழா எனவும் அழைக்கின்றனர்.

இவர்கள் வெளி ஆட்களை தங்களது புனித இடத்திற்குள் அனுமதிப்பது இல்லை. ஆண்கள் மற்றும் பெண்கள் வெண்ணிற ஆடை அணிந்து திருவிழாவை கொண்டாடுகின்றனர்.

வருடந்தோறும் டிசம்பர் மாத இறுதி அல்லது ஜனவரி மாத தொடக்கத்தில் இந்த பண்டிகையை கொண்டாடுவார்கள்.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான கோத்தர் இன மக்களின் பாரம்பரிய பண்டிகையான கம்பட்ராயர் திருவிழா கடந்த வாரம் ஊட்டி அருகே உள்ள கொல்லிமலை கிராமத்தில் தொடங்கியது.



முதல் நாளில் ஆண்டிற்கு ஒருமுறை திறக்கப்படும் கோவிலில் காணிக்கைகள் செலுத்தி பக்தர்கள் வழிபட்டனர். தினமும் மாலை 6 மணிக்கு தொடங்கி நள்ளிரவு ஒரு மணி வரை நடக்கும் இந்த விழாவில் பாரம்பரிய இசைக்கருவிகளை இசைத்தும், நடனமாடியும் மகிழ்ந்தனர். நேற்று அய்யனோர், அம்மனோர் கோவில் புதுப் பொலிவுடன் காட்சியளித்தது.

கோத்தர் இன மக்கள் தங்களது பாரம்பரிய உடை அணிந்து கோவிலுக்கு வந்திருந்தனர். கோத்தர் இன ஆண்கள் 5க்கும் மேற்பட்டோர் இசைக்கருவிகளை இசைக்க தொடங்கினர். அவர்கள் இசைக்க தொடங்கியதும், அங்கு கூடியிருந்த கோத்தர் இன ஆண்களும், பெண்களும் வட்டமாக நின்று கொண்டு தங்களது பாரம்பரிய நடனத்தை ஆடினர்.

அதனை தொடர்ந்து கோத்தர் இன மக்கள் பல்வேறு வண்ண உடைகள் அணிந்து வந்தனர். அப்போது தலைப்பாகை அணிந்து ராஜ உடையுடன் பாரம்பரிய நடனமாடினர். எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும். அதற்கு இயற்கை துணைபுரிய வேண்டி இந்த திருவிழா நடைபெறுவதாக கோத்தர் இன மக்கள் தெரிவித்தனர். இதில் சுற்று வட்டார கிராமத்தை சேர்ந்த மக்களும் கலந்து கொண்டனர்.

# 'இரும்பு கை மாயாவி' படத்தில் சூர்யாவுக்கு பதில் அமீர் கானா?



ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் கூலி படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்கி வருகிறார். இப்படத்தையடுத்து, கார்த்தியுடன் கைதி 2, சூர்யாவுடன் ரோலக்ஸ் மற்றும் இரும்பு கை மாயாவி என 3 படங்களை லோகேஷ் கைவசம் வைத்திருக்கிறார்.

இந்நிலையில், இரும்பு கை மாயாவி படத்தை பாலிவுட் நடிகர் அமீர் கானை வைத்து லோகேஷ் இயக்கப்போவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இந்த படத்தை தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் பான் இந்தியா படமாக இயக்கப்போவதாகவும், புஷ்பா, புஷ்பா 2 படங்களை தயாரித்த மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிப்பதாகவும் கூறப்படுகிறது. விரைவில் இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வைரலாகும் விஷ்வக் சென்னின் 'லைலா' பட டீசர்



தெலுங்கு சினிமாவில் மிகவும் பிரபலமான இளம் நட்சத்திரங்களில் ஒருவர் விஷ்வக் சென். வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்து ரசிகர்களால் பாராட்டப்படும் இவரது நடிப்பில், கடந்த ஆண்டு கேங்க்ஸ் ஆப் கோதாவரி, ஹாமி மற்றும் மெக்கானிக் ராக்கி ஆகிய படங்கள் வெளியாகி இருந்தன.

தற்போது இவர் லைலா என்ற படத்தில் நடித்துள்ளார். கதாநாயகியாக அகன்ஷா ஷர்மா நடித்திருக்கிறார். முன்பு கூறியதுபோல வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு பேர்போன விஷ்வக் சென் இப்படத்தில் ஆண், பெண் என இரண்டு கதாபாத்திரங்களில்நடித்துள்ளார்.சமீபத்தில்இவர்நடித்தஆண்,பெண்கதாபாத்திரத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், இப்படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. ராம் நாராயண் இயக்க ஷைன் ஸ்கிரீன்ஸ் பேனரின் கீழ் சாஹு கரபதி தயாரித்த இப்படம் அடுத்த மாதம் 14ம் தேதி வெளியாக உள்ளது.

# சிறந்த இயக்குநர்கள் பட்டியலில் என் பெயர் இல்லாதது வருத்தமே இயக்குநர் சுந்தர்



விஷால் நடிப்பில் சுந்தர் சி இயக்கத்தில் கடந்த 2013ம் ஆண்டு உருவான படம் 'மதகஜராஜா'. இதில் சந்தானம், அஞ்சலி, வரலட்சுமி சரத்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு விஜய் ஆண்டனி இசையமைத்துள்ளார். சுமார் 12 ஆண்டுகளாக வெளியாகாமல்இருந்தஇப்படம்,சமீபத்தில்வெளியானது.

நடிகர்கள் விஷால், சந்தானம், மனோபாலா ஆகியோரின் நகைச்சுவைக் காட்சிகள் பெரிதாகக் கவனம் பெற்றதால் படம் ரசிகர்களைக் கவர்ந்துள்ளது. மேலும், விமர்சன ரீதியாகவும் வரவேற்பைப் பெற்று வருகிறது.

மதகஜராஜா திரைப்படத்தின் வெற்றி விழாவில் தன் பெயரை நல்ல இயக்குநர்கள் பட்டியலில் வைக்காதது குறித்து பேசிய கருத்துகள்வைரலாகி வருகிறது. இன்றைய தினம் நடந்த வெற்றி விழாவில் சுந்தர்சி கூறுகையில், "கமர்ஷியல் படங்கள் பெரிய வெற்றி அடையும், ரசிகர்கள் ரசிப்பார்கள். கூட்டம் கூட்டமாக திரையரங்கிற்கு வருவார்கள். ஆனால் என் விஷயத்தில், எனக்கு உள்ளுக்குள் சின்னதாக வருத்தம் இருக்கிறது. அது என்னவெனில், எனக்கான பெரிய பாராட்டுகள் இருக்காது. நல்ல இயக்குநர்கள் என்ற பட்டியல் போட்டார்கள் என்றால் இத்தனை ஹிட் படங்கள் கொடுத்தும் அதில் என் பெயர் இருக்காது.

சினிமா என்பது மிகப்பெரிய வியாபாரம். லட்சக்கணக்கானோர் ஈடுபடுகிற, அவர்களது வாழ்க்கையை நிர்ணயிக்கிற ஒரு வியாபாரம். மிகப்பெரிய பொழுதுபோக்கு சாதனம். அதைத்தாண்டி கோடிக்கணக்கான மக்கள் நம்மை நம்பி காசு கொடுத்து 3 மணிநேரம் அவர்களது கவலைகளை எல்லாம் மறந்து இருக்க வருகிறார்கள். என்னதான் கமர்ஷியல் திரைப்படங்கள் என்ற டேக் இருந்தாலும், 30 வருடங்களாக மக்கள் ஆதரவுடன் இதுவரையில் இருக்கிறேன். மனதிற்குள் இன்னும் சின்ன வருத்தம் இருக்கிறது. அதற்கான இடம் இன்னும் கிடைக்கவில்லையோ என்று. அதற்காக கவலையும் படுவதில்லை. என் கடன் பணி செய்து கிடப்பதுதான். அதுதான் என் கொள்கை" என்றார்.

இயக்குநர் சுந்தர் சி கமர்ஷியல் திரைப்படங்களை எடுப்பதில் வல்லவர். இரண்டரை மணி நேரம் திரையரங்கில் ஆடியன்சை நன்றாக சிரிக்க வைக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு முதல் சாய்ஸ் சுந்தர் சி திரைப்படங்களாகத்தான் இருக்கும்.

# இது போன்ற செயல்பாடுகள் எளிதாக நடந்து விடாது கருண் நாயருக்கு சச்சின் பாராட்டு



இந்திய கிரிக்கெட் வீரரான கருண் நாயர் கடந்த 2016ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட்டில் முச்சதம் அடித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். இருப்பினும் அதற்கடுத்த போட்டிகளில் சொதப்பியதால் அணியிலிருந்து கழற்றி விடப்பட்டார். அதன் பின் அணியில் இடம் கிடைக்க போராடி வருகிறார்.

தற்போது நடைபெற்று வரும் விஜய் ஹசாரே கோப்பை தொடரில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் அவர், மீண்டும் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளார். இந்த தொடரில் இதுவரை 7 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 5 சதங்கள் உட்பட 752 ரன்கள் குவித்துள்ளார். இதனால் இவரை மீண்டும் அணியில் சேர்க்க வேண்டும் என கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

இந்நிலையில் கடினமான உழைப்பு மற்றும் கவனம் இல்லையெனில் ஒரே தொடரில் இவ்வளவு ரன்கள் அடிக்க முடியாது என்று அவரை ஜாம்பவான் சச்சின் மனதார பாராட்டியுள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் சச்சின், "7 இன்னிங்சில் 5 சதங்கள் உட்பட 752 ரன்கள் அடித்துள்ளது அசாதாரணமானது. இது போன்ற செயல்திறன்கள் எளிதாக நடக்காது, அவை மிகுந்த கவனம் மற்றும் கடின உழைப்பிலிருந்துவருகின்றன.தொடர்ந்துவலுவாகமுன்னேறி,ஒவ்வொருவாய்ப்பையும்பயன்படுத்திக்கொள்ளுங்கள்!" என்று பதிவிட்டுள்ளார்.

# இந்திய டி20 அணியின் துணை கேப்டன் பதவியிலிருந்து ஹர்திக் நீக்கப்பட்டது ஏன்..? தினேஷ் கார்த்திக் பதில்



இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிராக 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாட உள்ளது. இந்த தொடர் வரும் 22ம் தேதி தொடங்க உள்ளது. இந்த தொடருக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

சூர்யகுமார் யாதவ் தலைமையிலான அந்த அணியில் துணை கேப்டன் பதவி ஹர்திக் பாண்ட்யாவிடமிருந்து பறிக்கப்பட்டு அக்சர் படேலுக்கு வழங்கப்பட்டுள்ளது அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் ஹர்திக் பாண்ட்யா துணை கேப்டன்ஷிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டது ஏன்? என்று ரசிகர் ஒருவர் இந்திய முன்னாள் வீரரான தினேஷ் கார்த்திக்கிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த தினேஷ் கார்த்திக் கூறுகையில், "உண்மையாக எனக்கு தெரியவில்லை. ஹர்திக் பாண்ட்யா ஏன் துணை கேப்டன் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்று எனக்குத் தெரியவில்லை. அதற்கான காரணம் எதுவும் இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவரது தலைமையில் இந்திய அணி நன்றாக விளையாடியது. அவர் துணைக் கேப்டனாக இருந்த இருதரப்பு தொடர்களிலும் இந்தியா வென்றுள்ளது. எனவே ஏன் பாண்ட்யா நீக்கப்பட்டார் என்பதற்கான அறிகுறி கூட எனக்குத் தெரியவில்லை" என்று கூறினார்.

# டென்னிஸ் ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: ஜோகோவிச் 4வது சுற்றுக்கு முன்னேற்றம்



கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து கொண்ட ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், செக்குடியரசின் தாமஸ் மச்சாக் உடன் மோதினார்.

இதில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 61, 64 மற்றும் 64 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று 4வது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இவர் 4வது சுற்று ஆட்டத்தில் ஜிரி லெஹக்கா உடன் மோத உள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.